
## தமிழ்நாட்டு மக்களிடையே முதல்வருக்கு இருக்கும் ஆதரவைக் கண்டு விக்கித்துப் போயிருக்கும்!

# எதிர்க்கட்சிக்காரர்களுக்கு தலைவராகச் செயல்பட்டு ‘பாய்ண்ட்’ எடுத்துக் கொடுக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார் ஆளுநர் ரவி!

## தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அறிக்கை!

சென்னை, ஜன.26-

**முதலமைச்சருக்கு தமிழ்நாட்டு மக்களிடையே இருக்கும் ஆதரவைக் கண்டு விக்கித்துப் போயிருக்கும் எதிர்கட்சிகளைப் போலவே, தமிழ்நாட்டில் எதிர்கட்சிகளின் தலைவராகச் செயல்பட்டு வரும் ஆளுநர் ரவி அவர்கள் எதிர்கட்சிகளுக்கு ‘பாய்ண்ட்’ எடுத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளை வாட்ஸப் பார்வேர்டுகளை வைத்து தயாரித்துக் கொண்டிருக்கிறார் என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**



நம் ‘குடியரசுவின் 75 ஆண்டுகளை நிறைவு செய்யும் மங்கலமான தருணத்தில்’ எனச் சொல்லி அமங்கலத்தை தனது குடியரசு தின உரையாக வெளியிட்டிருக்கிறார் மாண்புமிகு ஆளுநர் ரவி அவர்கள். குடியரசு தின வாழ்த்து என்ற பெயரில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை வசைமாரி பொழிவதற்கு குடியரசு தினத்தை அரசியல் சட்டப் பதவியில் வகிக்கும் ஆளுநர் பயன்படுத்திக் கொண்டிருப்பது வேதனையானது. ஆளுநருக்கு அரசியல் சட்டத்திலும் நம்பிக்கை இல்லை. நம் நாட்டின் குடியரசு தினத்தன்று கூட நாலு நல்ல வார்த்தை சொல்ல மனம் இல்லை என்பதை இது காட்டுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை விமர்சிக்க குடியரசு தினத்தை அரசியல் கேடயமாக்குவது மிகவும் கண்டனத்திற்குரியது.

### தி.மு.க. அரசு மீது அவதூறுப் பரப்பும் ஆளுநர்!

சட்டமன்றத்தில் ஆளுநரின் செயல்பாடு, ஆளுநருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை, ஆளுநரின் தேநீர் விருந்து புறக்கணிப்பு என தனக்கு எதிராக செய்திகள் வந்து கொண்டிருப்பதை பார்த்து ஆளுநர் ரவி தனது தூக்கத்தை தொலைத்திருக்கிறார். அதனை போக்க திமுக அரசு மீது அவதூறாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

நிதி ஆயோக் அமைப்பு கடந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் 17 இலக்குகளில் தமிழ்நாடு பெரும்பாலானவற்றில் முன்னிலை பெற்றிருக்கிறது. ஒட்டு மொத்த மாநிலங்களை பொறுத்த வரை தேசிய அளவில் மூன்றாம் இடத்தை தமிழ்நாடு பிடித்தது. வறுமை ஒழிப்பு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களில் 92 புள்ளிகளுடன் தமிழ்நாடு முதலிடம் பெற்றது. இப்படி நிதி ஆயோக்கின் அறிக்கையில் சொல்லப்பட்டது எல்லாம் ஆளுநருக்கு தெரியாதா? இல்லை பிரதமர் மோடி ஆட்சியால் அமைக்கப்பட்ட நிதி ஆயோக் மீதே ஆளுநருக்கு நம்பிக்கை இல்லையா? இதெல்லாம் தெரியாமல் இருப்பது ராஜ்பவனின் பார்வைக் கோளாறா?

### மாநில அரசோடு மல்யுத்தம் நடத்த ராஜ்பவன் குஸ்தி களமல்ல!

“பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது” என மூன்று நாட்களுக்கு முன்பு சொன்ன ஆளுநர், இப்போது அப்படியே மாற்றி பேசுவதற்கு இரட்டை நாக்குதான் வேண்டும். “வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பெற்றோர் தங்கள் மகள்களை தமிழ்நாட்டுக்கு படிக்க அனுப்பும்போது பாதுகாப்பாக உணர்கின்றனர்” என பேசிய உதடுகள்தான், இன்றைக்கு தமிழ்நாட்டில் போதைப்பொருள் புழக்கம் , தீவிரவாத அச்சுறுத்தல் என்றெல்லாம் புரண்டு பேசுகின்றன. இப்படியெல்லாம் சொல்வதற்கு ‘மேதகு’ என்ற பெருமை வாய்ந்த அரசியலமைப்பு பதவியில் ஆளுநர் அமர்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை! பிளவு வாதப் பேச்சை பேசுவதற்கும், மாநில அரசோடு மல்யுத்தம் நடத்துவதற்கும் ராஜ்பவன் ஒன்றும் அரசியல் குஸ்தி களமல்ல!

தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிக்க விடாமல் முட்டுக்கட்டைப் போட்டு பல்கலைக்கழகங்கள் நிர்வாகத்தை முடக்கி வைத்திருப்பது ஆளுநர். பல்கலைக்கழகங்களை அரசியல் களமாக மாற்ற செயல்படுவதும் ஆளுநர்தான். ஆனால் ஏதோ பல்கலைக்கழகங்களின் நிர்வாகம் பற்றி ஏன் அக்கறை நாடகம்? ஆளுநர் ஆர்.என். ரவியின் பேச்சுக்கள் மக்களிடையே கொதிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், யாருடைய அரசியல் சதிக்கு ஆளுநர் துணை போகிறார்?

### குலக்கல்வியை ஊக்குவிக்கும் பா.ஜ.க.வின் ரப்பர் ஸ்டாம்ப் ஆளுநர்!

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மாணவர்கள் படித்து முன்னேறி நல்ல நிலமைக்கு வந்து விடக் கூடாது என்ற சனாதன வர்ணாசிரம கோட்பாட்டை தூக்கி பிடித்து, குலக்கல்வியை ஊக்குவிக்கும் விஸ்வகர்மா திட்டத்தை செயல்படுத்த துடிக்கும் ஒன்றிய பாஜக அரசின் ரப்பர் ஸ்டாம்பாக ஆளுநர் ரவி திகழ்கிறார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியை சீரழிக்க நினைக்கும் வஞ்சகர்களுக்கு துணை போகும் வேலையை ஒரு மாநிலத்தின் ஆளுநரே செய்ய துணிந்திருக்கிறார். பெரும்பாலான மக்களின் வாக்குகள் மூலம் அமைந்த மக்கள் மன்றமான சட்டமன்றத்தை துளியும் மதிக்காதவர் ஆளுநர். ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு அரசை முடக்க நினைக்கிறார். தமிழர் அடையாளங்களையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் அவமதித்து உணர்வுரீதியாக தமிழர்களை காயப்படுத்துகிறார். தொடர்ந்து தமிழ்நாட்டை மோசமான மாநிலமாக சித்தரித்து தமிழர்களை தேச விரோதிகள் போல் பேசிவருவது ஆளுநருக்கு அழகல்ல!

### தமிழ் மக்களைப் பற்றி இன்னும் அறியவில்லை ஆளுநர்!

”ஆளுநரை மாற்றிவிடாதீர்கள். அவர்தான் திமுகவுக்கான பிரச்சார பீரங்கி’ என எங்கள் தளபதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்லி வருகிறார். அந்த ஆத்திரம்தான் ஆளுநர் அறிக்கையில் நிரம்பி வழிகிறது. தமிழ்நாட்டு மக்கள் எதைச் சொன்னாலும் நம்பி விடுவார்கள் என அரசியல் பேசிக் கொண்டிருக்கும் ஆளுநருக்கு எங்கள் தமிழ் மக்களின் அரசியல் புரிதல் பற்றிய தெளிவில்லை என்று அவரது பேச்சிலேயே புலனாகிறது. வாட்ஸப் பார்வேர்டுகளை வைத்து ஒரு உரையைத் தயாரித்து அதைப் பேசிவிட்டு போனால் மேடைக்கு முன்னால் அமர்ந்திருக்கும் சிலர் கைதட்டலாம். ஆனால் தமிழ் மக்கள் தெளிவானவர்கள். அரசியல் உரையிலும் எழுத்திலும் ஒவ்வொரு வரிக்கும் என்ன உள்நோக்கம் என்பதைப் புரிந்து கொள்ளும் விவரமானவர்கள். ஆளுநர் எதை வேண்டுமானாலும் பேசட்டும். அது தமிழ்நாடு அரசுக்கும், திமுகவுக்கும் சாதகமானதாகவே அமையும்!

போதைப் பொருள் தடுப்பை மேற்கொள்ள எங்களது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 2022ஆம் ஆண்டில் மாநில அளவிலான மாநாடு நடத்தப்பட்டு 2023ல் மட்டும் 10,256 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 14,770 பேர் கைது செய்யப்பட்டனர். பள்ளி கல்லூரி மாணவர்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இத்தகைய செய்திகள் ஆளுநருக்குத் தெரியுமா? குஜராத்திலும் வட மாநிலங்களிலும் டன் கணக்கில் போதைப் பொருட்கள் கைப்பற்றப்படுவது எல்லாம் ஆளுநர் கண்ணுக்குத் தெரியவில்லையா?

### தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்கும் ஒன்றிய அரசுக்கு கருவியாக ஆளுநர்!

பாகுபாடான நிதி ஒதுக்கீட்டு அணுகுமுறைகள், பல்வேறு முட்டுக்கட்டைகள் மூலம் தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்கும் நோக்கத்துடன் ஒன்றிய அரசு செயல்படுவது வெளிப்படையாகத் தெரிகின்றது. அதற்கு ஆளுநரும் ஒரு கருவி! ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது அதில் பல்வேறு வெற்றிகளையும் ஈட்டி வருகிறது. இருந்தபோதும் மாநில அரசுக்கு போதிய நிதியை ஒதுக்காமல் தமிழ்நாடு அரசை வஞ்சித்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்க முயற்சித்து வருகிறது. இதையெல்லாம் தாண்டி தமிழ்நாடு அரசு வெற்றி நடைபோட்டு வருகிறது. வடக்கு எத்தனை சதிகளைச் செய்தாலும் அதை முறியடிக்கும் கலையை பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் எங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறார்கள்!

### முதல்வருக்கு பெருகிவரும் ஆதரவு கண்டு விக்கித்து நிற்கும் ஆளுநர்!

தமிழ்நாடு அரசு மக்களிடம் பெரும் ஆதரவு பெற்றிருக்கிறது. அரசை எதிர்த்துப் பேச எந்தவொரு விவகாரமும் இல்லை. 2026 தேர்தலிலும் திமுகவே 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறும் என எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் கேட்டு ஆளுநர் ரவி அவர்கள் விக்கித்துப் போயிருப்பார். அரசியல் செய்ய ஆசை இருந்தால் அப்பதவியிலிருந்து விலகி எங்களோடு நேருக்கு நேர் அரசியல் களத்திற்கு வரட்டும். திராவிட மாடல் அரசின்சாதனைகளை நாங்கள் சொல்கிறோம். தமிழ்நாட்டின் பெருமைகளை நாங்கள் பேசுகிறோம். ஆளுநர் ரவி அரசியல்வாதியாக எங்களுக்கு பதில் சொல்லட்டும். அதை விடுத்து குடியரசு தினம், சட்டமன்றம் என எதை எடுத்தாலும் அரசியல் செய்து நம் நாட்டின் குடியரசுத் தினப் பெருமைகளையும், தமிழ்நாட்டின் அருமைகளையும் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மதிவேந்தன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - கோவி.செழியன் மற்றும் நே.சிற்றரசு - என்.ஆர்.இளங்கோ வாழ்த்து!

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி இல்ல விழா!

## தலைமை: மயிலை த.வேலு! முன்னிலை: ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி!

*சென்னை, ஜன. 26-*

*சென்னை தென்மேற்கு மாவட்டம் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி மற்றும் ரா.வேலு - அமுதா பேரனும், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வே.வாஞ்சிநாதன் - கனிமொழி மகன் கொடி என்ற வா.லிங்காவிற்கு முதல் பிறந்தநாள் விழா இன்று (26-01-2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் அசோக் நகர் 7வது அவென்யூ 27வது தெருவில் உள்ள YMCA (அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில்) சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் த.வேலு தலைமையில் தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, மயிலை கிழக்கு செயலாளர் எஸ்.முரளி, 10வது மண்டலக்குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, வட்ட கழக செயலாளர் மு.செல்வகுமார், மாவட்ட அதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் வே.சபாரத்தினம், பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் எம்.கே.ராஜேஷ், முன்னாள் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.வினோத்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கணேஷ் பாண்டியன் ஆகியோர் வரவேற்புரையுடன்.*

*நடைபெறுகின்ற நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தலைமை கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*இதில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழ்ச்சிதங்கபாண்டியன் எம்.பி., கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம்கலை, சட்டமன்ற உறுப்பினர்கள் – தாயகம் கவி எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. க.தனசேகரன் எம்.சி., எஸ்.மோகன் கே.ஜெ.சரவணன் ஜி.மோகனகிருஷ்ணன் பி.எஸ். அமுல்ராஜ் நந்தனம்.நம்பிராஜன் ஆ.சந்திரசேகர் மு.சத்யா நந்தனம்.வேதா கே.மலர் என். அன்பழகன் கே.கண்ணன் எம்.சி.மு.ராஜா எம்.சி.இரா.துரைராஜ் மா.பா.அன்புதுரை வினோத்வேலாயுதம் பெரிய மேடு.வி.சுதாகர் எம்.ஆறுமுகம் ஜெ.ஜானகிராமன் செல்வி சௌந்தராஜன் அ.பாபு யோகேஷ்ரவி வழக்கறிஞர்.எம்.ஸ்ரீதர் எம்.சி. மா.அன்பரசன் உ.துரைராஜ் வி.எஸ்.ராஜ் ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு வி.எஸ்.கலை ராஜாஅன்பழகன் எம்.சி.மோனிஷாகருணாநிதி ஈகை.கருணாகரன்*

*புலியூர் டி.மோசஸ், சா.தேவராசு, ஆர்.குமரன், ஜெ.எஸ்.ஆர்.ஜெகன்ராஜ், என்.எஸ்.பாலசுப்ரமணியன், எஸ்.உமாசங்கர், எ.அஸ்வின் குமார், டாண்டி பிரகாஷ், ச.சண்முகநாதன், பானு சலீம், கே.சரவணன், ஆர்.கதிரவன், என்.ஜி.சேகரன், வி.விஜய்வெங்கடேசன், ஜி.மோகன்ராஜ், த.புவியரசன், மயிலை ஆர்.பாலு, எம்.ராஜதுரை, முகமது ஹர்சத், கே.ஜெயராமன், ம.சதிஷ், அ.பொன்னுத்துரை, முரசொலி சிங்காரம், டாக்டர் பூபதி, டாக்டர் அனந்த குமார், டாக்டர் பி.லட்சுமணன், டாக்டர் எஸ்.எஸ்.சரவண குமார் எஸ்.எம்.கார்த்திக் ராஜா, மு.பாலகுரு, பவானி ரவி டி.ஸ்ரீதர் எஸ்.ஸ்ரீதர், ஜி.ஹரிநாராயணன்.*

*வட்ட கழக செயலாளர்கள்: எம்.எஸ்.பழனி, வழக்கறிஞர் எம்.கே.மூர்த்தி, வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன், மு.ம.செந்தில்குமார், ஜி.பி.செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், என்.துரை, டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, பி.ஜெயக்குமார், பி.மாரி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*

*ரா.ரகு, ரா.ஸ்ரீதர் ரா.முருகன் மு.ஏழுமலை நா.மகிழ்நெதி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*



பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக சிறப்பு கர்ப்ப கால மகளிர் முகாம் நடைபெற்றது. இதில் 9 வது மண்டலம் உதவி சுகாதார அதிகாரியும் 118 வது வார்டை சேர்ந்த நகர்ப்புற சுகாதார மையத்தின் மருத்துவர் முரளி காந்த், மருத்துவர் மெர்நளினி ஆகியோர் மையத்தின் பணியாளருடன் பங்கேற்ற இம்முகாம் 118 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் மற்றும் கழகத்தினர், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். பெண்கள் ஏராளமானோர் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை பெற்றனர்.

---

மேயர்.பிரியாராஜன் தலைமை! சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட – துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில்

# 16-வது நாளாக அமைச்சர் பி.கே.சேகர் பாபு மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம்!

## மக்கள் தேவைகளைக் கேட்டறிந்தார்!

சென்னை,ஜன.26-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர் அம்பத்தூர் வில்லிவாக்கம் திரு.வி.க. நகர் எழும்பூர் துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் நேற்று பதினாறாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் நேற்று (25.01.2025) மாலை 5.30 மணியளவில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, 5 வது மண்டலம், வட்டம் 60 வது வட்டத்தில் மேயர் திருமதி. பிரியா ராஜன் தலைமையில், பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, மண்டல குழு தலைவர் பி. ஸ்ரீராமுலு ஆகியோர் முன்னிலையில் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு துறைமுகம் கிழக்கு பகுதி 60 வது வட்டத்தில் உள்ள ரேவ் பகுதியில் கார்ப்பரேஷன் காலனி ,நான்காவது கடற்கரை சாலை, வெங்கடலிங்கம் தெரு, கோபால் செட்டி தெரு ஆகிய பகுதிகளில் பொது மக்களை நேரில் சந்தித்து அவர்கள் பிரதானமாக தெரிவித்த குறிப்பாக மின்சாரத்துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆகிய துறைகள் சார்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய கோரிக்கைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் இடையில் கார்ப்பரேஷன் காலனியில் வசிக்கும் கழக உறுப்பினர் திருமதி வைரம் அவர்கள் உடல்நலம் பாதிப்படைந்திருப்பதை அறிந்து அவரது இல்லத்திற்கு சென்று நலம் விசாரித்தும்.. தொடர்ந்து 60 வது வட்ட துணைச் செயலாளர் ராஜேஸ்வரி அவர்களின் மகன் இ.டேவிட் அண்மையில் இயற்கை எய்ததையொட்டி அவரது இல்லத்திற்கு சென்று ஆறுதல் தெரிவித்தார்.



இந்த ஆய்வின்போது மாமன்ற உறுப்பினர் மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எம். தேவன், வட்டக் கழகச் செயலாளர்கள் கே. கவியரசு.ஆ.நா.பார்த்திபன் மற்றும் மாநகராட்சி, குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரிய அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.